வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 16.1.2026 நேரம்-மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திருநரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை அசாம் மற்றும் மேற்குவங்கத்திற்கு செல்கிறார்.

நடைபெற உள்ள பட்ஜெட் கூட்டத் தொடரில் விதைச் சட்டம் 2026-ஐ கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர் தினம் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

மோடி-ஸ்டார்ட்-அப்

தேசிய ஸ்டார்ட்-அப் தினத்தை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற ஸ்டார்ட்-அப் இந்தியாவின் 10- ஆம் ஆண்டு நிறைவை குறிக்கும் வகையிலான நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டார். அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளையும் அவர் பார்வையிட்டார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு………

புதுமைகளை வளர்ப்பதற்கும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும் முதலீடு சார்ந்த வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் மாற்றத்தை நோக்கிய தேசிய திட்டமாக ஸ்டார்ட்-அப் இந்தியாவை பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 2016-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ஆம் தேதி தொடக்கி வைத்தார். இந்த முயற்சியின் நோக்கம் இந்தியாவை வேலை தேடுபவர்களைவிட, வேலை உருவாக்குபவர்களின் நாடாக மாற்ற வேண்டும் என்பதாக உள்ளது. முன்னதாக தேசிய ஸ்டார்ட்-அப்

தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்தார். மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் விண்வெளி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளிலும் புத்தொழில் விரிவாக்கத்திற்கான சூழல் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். 10-ஆவது தேசிய ஸ்டார்ட்-அப் தினத்தை ஒட்டி புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கலந்து கொண்டு உரையாற்றிய போது நாட்டின் புத்தொழில் வளர்ச்சி மிகப் பெரிய வரலாற்று சாதனையை படைத்துள்ளதாக தெரிவித்தார். இந்தியா தற்போது உலக அளவில் 3-ஆவது பெரிய ஸ்டார்ட்-அப் மையமாக உருவெடுத்துள்ளது என்றும் கூறினார். 2016-ஆம் ஆண்டில் 400 ஸ்டார்ட்-அப்புகள் மட்டுமே இருந்தன என்றும் ஆனால் தற்போது 2 லட்சத்திற்கும் அதிகமான ஸ்டார்ட்-அப்கள் உருவாகி உள்ளதாகவும் தெரிவித்தார். இந்தியாவில் ஸ்டார்ட்-அப்புகளின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது என்றும் திரு பியஷ்கோயல் தெரிவித்தார்.

*அமித் ஷா-ஸ்டார்ட்- அப்*

நாட்டின் ஸ்டார்ட்- அப் சுற்றுச்சூழல் அமைப்பு உலக வரைபடத்தில் மிகவும் பிரகாசமாக ஒளிர்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். தேசிய ஸ்டார்ட்- அப் தினத்தை ஒட்டி, இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் நமது இளைஞர்கள் தங்களின் அறிவாற்றல் விடா முயற்சி மற்றும் மன உறுதி மூலம் நாட்டின் ஸ்டார்ட்- அப் நிறுவனங்களை பிரகாசிக்கச் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

*மோடி-பயணம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் பயணமாக அசாம் மற்றும் மேற்குவங்கத்திற்கு நாளை செல்கிறார். தனது முதல் நாள் பயணமாக அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள போடோ சமூகத்தின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் வரலாற்று சிறப்பு மிக்க கலாச்சார நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார். அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்

கிழமை நடைபெறும் நிகழ்ச்சியில் 6 ஆயிரத்து 950 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள காசிரங்கா மேம்பால திட்டத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். அதன்பின்னர் குவஹாத்தி - ரோதக் மற்றும் திப்ரூகர்-லக்னோ இடையே இயக்கப்பட உள்ள 2 புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில்களையும் அவர் கொடி அசைத்து தொடக்கி வைக்க உள்ளார். இந்த புதிய ரயில் சேவைகள் மூலம் வடகிழக்கு மற்றும் வட இந்தியா இடையேயான ரயில் போக்குவரத்து மேம்படுவதோடு மக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் வசதியான பயணம் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*சிவராஜ் சிங்-விதை*

வரவிருக்கும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் விதைச் சட்டம் 2026-ஐ கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தரமற்ற போலியான மற்றும் அங்கீகரிக்கப்படாத விதைகளின் விற்பனையை தடுப்பதே இந்த சட்டத்தின் நோக்கம் என்றார். விவசாயிகளுக்கு உயர்தர சான்றளிக்கப்பட்ட விதைகளை வழங்குவதை உறுதி செய்வதோடு தரமற்ற விதைகளை விற்பனை செய்வோருக்கு எதிரான நடவடிக்கையை தீவிரப்படுத்தவும், பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரக் கூடிய பயிர் ரகங்களை ஊக்குவிப்பதையும் இந்த சட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது என்றார். விதை சட்டம் 2026-ன் மூலம் விவசாயிகளுக்கு மற்றொரு முக்கிய பலனாக அவர்கள் வாங்கும் விதைகள் எங்கிருந்து வந்தன, அவற்றை யார் தயார் செய்து வழங்கினார்கள் போன்ற தகவலை தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

*நமோ-புத்தக திருவிழா*

புதுடெல்லியில் நடைபெறும் நமோ புத்தக திருவிழாவில் மத்திய அறிவியல் மற்றும்தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், ஜென்-வி-பானோ மற்றும் மகாத்மா ஆகிய தலைப்பிலான 2 புத்தகங்களை இன்று வெளியிட்டார். இன்றும் நாளையும் நடைபெறும் இந்த புத்தக திருவிழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி பற்றிய தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும்

எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஒரே துறையின் கீழ் ஒன்றிணைந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளுவர் தினம்

இன்று திருவள்ளுவர் தினத்தை ஒட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சிபி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் திருக்குறள் தந்து வான்புகழ் பெற்ற திருவள்ளுவரின் திருநாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சிறப்பான அறிவாற்றலை வெளிப்படுத்தும் திருக்குறளை அனைவரும் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் 2 ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் திருக்குறளின் வழி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் வள்ளுவனின் புகழ் தழைத்தோங்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## புதுச்சேரி-திருவள்ளுவர் தினம்

திருவள்ளுவர் தினம் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவரின் திருவுருவ சிலைக்கு சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் ஜே சரவணன் குமார், திரு நேரு என்கிற குப்புசாமி, திரு கே எஸ் பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## மாட்டுப் பொங்கல்

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மாட்டுப் பொங்கல் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளை ஒட்டி, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் உழவுக்கு உறுதுணையாய் விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஒருஅங்கமாக திகழும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் கொண்டாடப்படும் இத்தினத்தில் விவசாய பெருமக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். மாட்டுப் பொங்கலை ஒட்டி, மதுரை பாலமேட்டில் ஜல்லிக் கட்டு போட்டி நடைபெற்றது.

## பொங்கல் கல விழா

புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களை மகிழ்விக்கும் வகையில் நாளை புதுச்சேரியில் 10 இடங்களில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு.............

இந்த கலைவிழா நாளை மாலை 6 மணிக்கு கடற்கரைச் சாலையில் உள்ள காந்தி திடலில் தொடங்கி இரவு 9 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே கடற்கரைச் சாலையில் உள்ள பழைய நீதிமன்ற வளாகம், மற்றும் தலைமைச் செயலகத்தின் அருகிலும் கடற்கரைச் சாலையில் மற்றொரு இடத்திலும் கலை விழா நடைபெறுகிறது. மேலும் முருங்கப் பாக்கம் திரவுபதி அம்மன் கோவில் திடல், வில்லியனூர் தென் கோபுர வீதி, குருவி நத்தம் மாரியம்மன் கோவில் திடல், மணமேடு கிராமத்தில் உள்ள கலையரங்கம், பி எஸ் பாளையம் சந்திப்பு, காலாப்பட்டு முருகன் கோவில் திடல் ஆகிய இடங்களிலும் நாளை சனிக்கிழமை மாலை 6 மணியில் இருந்து 9 மணி வரை பல்வேறு கிராமிய பாரம்பரிய கலைக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று புதுச்சேரி சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது.

*பிஜேபி-தேர்தல்*

பிஜேபியின் தேசிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையை அக்கட்சி அறிவித்துள்ளது. அதன்படி இம்மாதம் 19-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் நடைபெறும் என்றும் அதேநாளில் வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 20-ஆம் தேதி தேசிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறும் என்றும் பிஜேபி அறிவித்துள்ளது.

*வானிலை*

தமிழிகம் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்றும் அதிகாலை வேலையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, தமிழகம், புதுவை, காரைக்கால் மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்தியப் பகுதிகளில் நிலவும் வடகிழக்கு பருவமழை அடுத்த 2 தினங்களில் விலகுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ஜெய்சங்கர்*

கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவும்-ஜப்பானும் தங்கள் உறவை பொருளாதார உறவில் இருந்து விரிவான மற்றும் மூலோபாய கூட்டாண்மையாக வெற்றிகரமாக மாற்றி உள்ளன என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ஜப்பானிய பிரதிநிதி திரு தோஷி பிட்சு மொடோகி-யுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது அவர் இதைத் தெரிவித்தார். மேலும் இந்தியாவின் மகாசாகர் முயற்சி மற்றும் இந்தோ-பசிபிக் தொலைநோக்கு பார்வை ஜப்பானை சுதந்திரமான மற்றும் வெளிப்படையான இந்தோ-பசிபிக் கண்ணோட்டத்துடன் நெருக்கமாக இருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். அரிய கனிமங்கள் மற்றும் எரிசக்தி, சுகாதாரம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு பிரச்சனைகள் குறித்து விவாதிக்க இருநாடுகளும்

ஆவலுடன் இருப்பதாகவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திருநரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை அசாம் மற்றும் மேற்குவங்கத்திற்கு செல்கிறார்.

நடைபெற உள்ள பட்ஜெட் கூட்டத் தொடரில் விதைச் சட்டம் 2026-ஐ கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர் தினம் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/16.1.2026/Script/.

----------------------